
உ
சிவமயம்





யாழ் நெடுந்தீவு மத்தியைப் பிறப்பிடமாக கொண்ட இந்து உயர் வேளாளர் குல
இரு மரபும் தூய தனிநாயக முதலியார் வழி வந்த
அமரர்

# உயர் திருமதி சிரோன்மணி கணேசலிங்கம்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவஞ்சலி மலர்

23.12.2017



உ

சிவமயம்



யாழ் நெடுந்தீவு மத்தியைப் பிறப்பிடமாக கொண்ட இந்து உயர் வேளாளர் குல

இரு மரபும் தூய தனிநாயக முதலியார் வழி வந்த

அமரர்

# உயர் திருமதி சிரோன்மணி கணேசலிங்கம்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவஞ்சலி மலர்

**23.12.2017**

உ

# சமர்ப்பணம்

எமது வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கு
அல்லும் பகலும் அரும்பாடுபட்டு
அன்பால், பண்பால், பாசத்தால் ஆட்கொண்டு
எம்மை எல்லாம் உயர் நிலைக்கு ஆளாக்கிய
எமது குலதெய்வத்தின் பாத மலர்களுக்கு
எமது சிரம் தாழ்த்தி கரம் கூப்பி
வணங்கி சமர்ப்பிக்கும்
இதயபூர்வ
அஞ்சலி மலர்


உங்கள் ஆதம சாந்திக்காக இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.



**இங்ஙணம்**
**பிள்ளைகள்,**
**பேரப்பிள்ளைகள், மருமக்கள்,**



உ
சிவமயம்



தோற்றம்
08.04.1933

அமரர்

மறைவு
23.11.2017

# சிரோன்மணி கணேசலிங்கம்

அவர்கள்

## திதி வெண்பா

ஏவிளம்பி வருஷமாம் கார்த்திகைத் திங்களில்
பூண்ட பூர்வ பட்சமாம் பஞ்சமி திதியில் - சீர்பெற்ற
சிரோன்மணி கணேசலிங்கம் பெருக்கடியான்
சித்திவிநாயகன் சீரடியை சென்றடைந்தார் - இவ்
மண்ணுலக வாழ்வு நீத்து.

# பஞ்சபுராணம்



திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்து அடி போற்றுகின்றோமே.

## தேவாரம்

கோல மால்வரை மத்தென நாட்டிக்
கோள ரவுசுற் றிக்கடைந்த தெழுந்த
ஆல நஞ்சுகண் டவர்மிக இனிய
அமரர் கட்கருள் புரிவது கருதி
நீல மார்கடல் விடந்தனை யுண்டு
கண்டத் தேவைத்த பித்தநீ செய்த
சீலங் கண்டுநின் திருவடி யடைந்தேன்
செழும்பொ ழில்தரும் புன்கூரு ளாயே

## திருவாசகம்

மாறிநின் றென்னை மயக்கிடும் வஞ்சப்
புலனைந்தின் வழியடைத் தமுதே
ஊறிநின் றென்னுள் எழுபரஞ் சோதி
உள்ளவா காணவந் தருளாய்
தேறலின் தெளிவே சிவபெருமானே
திருப்பெருந் துறையுறை சிவனே
ஈறிலாப் பதங்கள் யாவையுங் கடந்த
இன்கமே என்னுடை அன்பே

## திருவிசைப்பா

நீறணிபவளக் குன்றமே நின்ற
நெற்றிக் கண்ணுடையதோர் நெருப்பே
வேறணி புவன போகமே யோக
வெள்ளமே மேருவில் வீரா
ஆறணி சடையெம் அற்புதக் கூத்தா
அம்பொன்செ ம்பலத் தரசே
ஏறணி கொடியெம் மீசனே யுன்னைத்
தொண்டனேன் இசையுமா றிசையே

## திருப்பல்லாண்டு

தாதையைத் தாளற வீசிய சண்டிக்கும்
அண்டத் தொடுமுடனே
பூதலத் தோறும் வணங்கப் பொற்கோயிலும்
போகமும் அருளிச்
சோதி மணிமுடித் தாமமும் நாமமுந்
தொண்டர்க்கு நாயகமும்
பாத கத்துக்கப் பரிசு வைத்தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள
அளப்பரும் கரணங்கள் நான்கும்
சிந்தனையே ஆகக் குணமொரு மூன்றும்
திருந்துசாந் துவிகமே ஆக
இந்துவாழ் சடையான ஆடமா னந்த
எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்தபே ரின்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார்

## திருப்புகழ்

அபகார நிந்தைபட் டுழலாதே
அறியாத வஞ்சரைக் குறியாதே
உபதேச மந்திரப் பொருளாலே
உனைநா னினைந்தருட் பெறுவேனே
இபமா முகன் தனக் க்ளையோனே
இமவான் மடந்தையுந் தமிபாலா
செபமாலை தந்தசற் குரநாதா
திருவாவினன்குடிப் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்

திருச்சிற்றம்பலம்



# விநாயகர் அகவல்

சீதக்களபச் செந்தாமரைப் பூம்
பாதச்சிலம்பு பலவிசை பாட
பொன்னரை ஞாணும் பூந்து கிலா டையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழைவயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்கு சிந்தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீலமேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்கு பொன்முடியும்
திரண்ட முப்புரி நூல் திகழொளி மார்பும்
சொற்பதங் கடந்த துரிய மெய்ஞ்ஞான
அற்புதம் னீன்ற கற்பகக் களிறே
முப்பழம் நுகரும் மூஷிக வாகனா
இப்பொழுதென்னை ஆட்கொள்ள வேண்டித்
தாயாயெனக்குத் தானெழுந்தருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்தே
திருந்திய முதலைந்தெழுத்தும் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உளந்தனில் புகுந்து
குருவடிவாகிக் குவலயம் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடாவகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடாயுதத்தாற் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டி யென் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையுங் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்குமுபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக்கருளிக்
கருவிகளொடுங்குங் கருத்தினை அறிவித்து
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து
தலமொரு நான்குந் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்கமறுத்தே
ஒன்பது வாயில் ஒரு மந்திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறாதாரத் தங்கிசை நிலையும்
பேறா நிறத்திப் பேச்சுரை யறுத்தே
இடைபிங்கலையின் எழுத்தறிவித்துக்

கடையிற் சுழுமுனைக் கபாலமுங் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவிலுணர்த்திக்
குண்டலியதனிற் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலாதாரத்தின் மூண்டெழு கனலைக்
காலாலெழுப்பும் கருத்தறிவித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச் சக்கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக்கரத்தின் உறுப்பையுங் காட்டிச்
ஷண்முக தூலமுஞ் சதுர்முக சூக்கமும்
எண்முகமாக இனிதெனக் கருளிப்
புரியட்டகாயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையும் தெரிசனப் படுத்திக்
கருத்தினிற் கபால வாயிற்காட்டி
இருத்தி முக்தி இனிதெனக்கருளி
என்னையறிவித்து எனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்தே
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே என்றன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி இரண்டிற்கொன்றிடமென்ன
அருள் தரும் ஆனந்தத்தழுத்தி என் செவியில்
எல்லையில்லா ஆனந்தமளித்து
அல்லல் களைந்தே அருள் வழி காட்டிச்
சத்தத்தினுள்ளே சதாசிவம் காட்டிச்
சித்தத்தினுள்ளே சிவலிங்கங் காட்டி
அணுவிற்கணுவாய் அப்பாலுக் கப்பாலாய்க்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடும் மெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறிவித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனையாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே!

## சகலகலாவல்லி மாலை

*திருச்சிற்றம்பலம்*

வெண்டா மரைக்கன்றி நின் பதந்
தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாது கொலோ
சகமேழு மளித்
துண்டா னுறங்க வொழித்தான்பித்தாக
வுண்டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகல கலாவல்லியே.

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்வாய்
பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
கனதனக் குன்றுமைம்பாற்
காடுஞ் சுமக்குங் கரும்பே
சகல கலாவல்லியே

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு
தார்ந்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ
லோவுளங் கொண்டுதெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக்கண்டு
களிக்குங் கலாப மயிலே

சகல கலாவல்லியே
தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த
கல்வியுஞ் சொற்சுவை தோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய்வட நூற் கடலுந்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந்
தொண்டர் செந் நாவினின்று
காக்குங் கருணைக் கடலே
சகல கலாவல்லியே

பஞ்சப் பிதந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்னே
நெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவச முயர்த்தோன்செந்
நாவு மகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
சகல கலாவல்லியே.

பண்ணும் பரதமுங் கல்வியுந்
தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்
காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங்
கனலும் வெங்காலு மன்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய்
சகல கலாவல்லியே.

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல்கா
யுளங் கொண்டு தொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பா
லமுதந் தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெள்ளோதிமப் பேடே
சகல கலாவல்லியே.

சொல்விற் பனமுமவ தானமுங்
கல்வி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமைகொள்வாய்
நளினா சனஞ்சேர்
செல்விக் கரிதென் றொருகால
முஞ்சிதை யாமைநல்குங்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே
சகல கலாவல்லியே.

சொற்கும் பொருட்கு முயிராமெய்ஞ்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர்யார்
நிலந் தோய்புழைக்கை
நற்குஞ்சரத்தின் பிடியோ
டரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத்தாயே
சகல கலாவல்லியே.

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச்செய்வாய்
படைப்போன் முதலாம்
விண்கண்ட தெய்வம்பல்
கோடியுண்டேனும் விளம்பி லுன்போற்
கண்கண்ட தெய்வமுளதோ
சகல கலாவல்லியே.

***தோல்வி உன்னை சந்திக்க சிந்திக்கிறதா? ஒரு கணம் நீ ஏன் தோற்றாய் என்று சிந்தி. அதன் பிறகு உன்னை தோல்வி சந்திக்க சிந்திக்கும்.***

***அன்பு என்பது சிறந்த ஒன்று அது அழிவதற்கு நீங்கள் காரணம் ஆகி விடாதீர்கள்...***

***புரியாத வாழ்க்கைப் பாதைகள்....... தொடரும் பயணங்கள் முடியும் இடம் தெரியாமல் தவிக்கும் உள்ளம்.......***

## அமரர் சிரோன்மணி கணேசலிங்கம் அவர்களின் வாழ்க்கை வரலாறு

திரையெறியும் கடலணங்கார் தலாட்டும் தீவு
செந்தமிழன் மணங்கமழும் தென்றலுலாத்தீவு
கரையொதுங்கும் நித்திலங்கள் கதிரெறிக்கும் தீவு
காமதேவன் ஆனிரைகள் கற்பகஞ்சேர் தீவு
புரையறவே கற்றவர்கள் புகழ் விரித்த தீவு
போற்ற விருந்தோம்பி மனம் பூரிக்கும் தீவு
தரையிலுயர் தீவுகளில் தன்பதிபோல் தோன்றித்
தனித்துவத்தின் மகத்துவத்தை விளக்கும் நெடுந்தீவே
"எனப்பாடப்படும் நெடுந்தீவு"

இந்து சமுத்திரத்தின் முத்தென திகழும் ஈழவள நாட்டின் வடபால் அமைந்துள்ள யாழ்ப்பாணத் தமிழீழ நாட்டில் தீவகங்களில் மிகப்பெருமை வாய்ந்ததும், பல அறிஞர்களும், சான்றோர்களும் வாழ்ந்த செழிப்பும், இயற்கை அழகும், பெருமையும் கொண்டிலங்கும் இத்தீவில்

இரு மரபும் தூய தனிநாயக முதலியார் வழித் தோன்றலும், கணபதிப்பிள்ளை உடையாரின் பேத்தியும், வைத்தியநாதன் உடையாரின் மூத்த முத்தாய் வந்துதித்த "சிரோன" என்றும் சிரோனக்கா என்றும் அன்பாக அழைக்கப்படும் அமரர் சிரோன் மணி கணேசலிங்கம் அவர்கள் 1933ம் ஆண்டு சித்திரை மாதம் 08ம் திகதி இவ்வுலகில் வந்துதித்தார். இவர் தன் அன்புச் சகோதரிகளாம் சின்னம்மா, குஞ்சு, ராசுவுடன் கூடி வாழ்ந்து அன்பையும், பண்பையும் , அறிவையும் அழகுறக் கற்று மங்காத ஒளி விளக்காய் எல்லோர் உளமதிலும் பதிந்து நின்று வந்தோர்க்கு விருந்தோம்பி வர விருந்தோம்பி காத்திருக்கும் நற்குணம் கொண்டவளாய்

வாழ்ந்த காலத்தில், பெற்றோரின் நல்லாசியுடன், இரு மரபும் தூய தனிநாயக முதலியார் வாழையடி வாழையாக வந்த கந்தையா விசாலாட்சியின் இரண்டாவது பிள்ளையான கணேசலிங்கம் எனும் கணேசனை கரம் பற்றிக் கொண்டார்.

அன்புக்கினியவனுடனான இல்வாழ்வில் இன்புற்று சிறப்பின் இனிய செல்வங்களாய் வந்துதித்த அமரர் கமலா, சந்திரா, சத்தியா, இந்திரா, ஜெயக்குமார், யசோதரகுமார், நிர்மலா, பாலகுமார் என மழலைகள் தவழ்ந்தனர். கணவனின் அன்பாலும், அன்புக் குழந்தைகளின் சிறப்பாலும் நிறைவு கண்ட சிரோன்மணி மருமக்கள், பேரக் குழந்தைகள் என்று அகமகிழ்ந்து வாழ்ந்து வந்தபோது நோர்வே, சிங்கப்பூர், இந்தியா, சுவீடன் என்ற நாடுகளுக்குச் சென்று தனது பிள்ளைகள், பேரப்பிள்ளைகளோடு சில காலம் வாழ்ந்து வந்தார். பின்னர் “எந்நாடு என்றாலும் எம் தாய் நாட்டைப் போல் வருமா” என்ற கூற்றுக்கமைய தாய் நாட்டில் வாழும் தனது பிள்ளைகளோடு வாழ விரும்பி தனது இளைய மகளுடன் கொழும்பில் வசித்து வந்தார். பின்னர் தான் பிறந்த யாழ் மண்ணில் சில காலம் வாழ வேண்டுமென ஆசைப்பட்டு தனது இளைய மகளையும் அழைத்துக் கொண்டு யாழ் மண் வந்து தனது மூத்த மகளுடன் சில நாட்களாக இனிய தன் வாழ்வைத் தொடர்ந்த போது 23.11.2017ல் இவ் மண்ணுலகை நீத்துச் சிவபதமடைந்தார்.

பிள்ளைகள் பரிதவிக்க, பேரப்பிள்ளைகள், மருமக்கள், பேதலிக்க, உற்றார், உறவினர், நண்பர்கள் உடல் பதை பதைக்க 26.11.2017 பிற்பகல் 2.30 மணியளவில் தனது இறுதிப் பயணத்தை உற்றார், உறவினர், நண்பர்கள் புடைசூழ ஆரம்பித்து பாற்பண்ணை இந்து மயானத்தில் எரியடை மூழ்கி ஏகினார் பெருவாழ்வு.

# கண்ணீர் அஞ்சலி



மலர்வு
–
08
–
04
–
1938

உதிர்வு
–
28
–
11
–
2017

விழிகள் கரைகிறதே..
வேதனை நெஞ்சை முட்டுகிறதே
ஓடி ஓடி திரிந்து உலாவிய இதயம்
நிரந்தரமாய் உறங்கியதேன்?
உங்கள் பிரிவின் துயரச் செய்தி கேட்டு
காற்று வீச மறுக்கிறதே வாய்பேச மறுக்கிறதே
உங்கள் பாசத்தால் கவர்ந்த உள்ளங்கள்
இன்று கண்ணீரில் மிதப்பதை தவிர்க்க
ஒரு கணம் மீண்டும் கண்திறக்க மாட்டீரோ

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

அமரர்
## கணேசலிங்கம் சிரோன்மணி

துயரில் பங்குகொள்ளும்


உறவினர்கள்
கனகபுரம், கிளிநொச்சி.



# என்றென்றும் நன்றி கூறுகின்றோம்

எங்கள் குடும்ப விளக்கு, எம் வாழ்வில் வழிகாட்டியாக இருந்து எம் இதயங்களில் நீங்காத இடம் பிடித்து எம்மை விட்டு வெகுதூரம் சென்ற அன்பு அம்மாவின் மரணச் செய்தி அறிந்து, நேரடியாகவும், வெளிநாடு களில் இருந்தும், உள்நாட்டில் பல பாகங்களில் இருந்தும் வந்து அவரின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டோர்க்கும், உற்றார், உறவினர், அயலவர், நண்பர்கள் மற்றும் பல வழிகளில் முன்னின்று உதவியவர்களுக்கும், வெளிநாடுகளிலிருந்தும் உள் நாட்டில் பல பாகங்களில் இருந்தும் தொலைபேசி மூலமும், முகநூல் மூலமும் ஆறுதல் கூறியவர்க ளுக்கும், மலர்வளையங்களால் அஞ்சலி செலுத்தியவர் களுக்கும், கண்ணீர் அஞ்சலி வெளியிட்டவர்களுக்கும், அந்தியேட்டி சபீண்டிகரண ஆத்ம சாந்திப் பிரார்த் தனைகளிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொண்ட அனைத்து உள்ளங்களிற்கும் எமது மன முவர்ந்த நன்றிகள்!

**என்றென்றும் அன்புடன்**
**பிள்ளைகள்**
**பேரப்பிள்ளைகள்,**
**மருமக்கள்.**


கீதாசாரம்
எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ, அதுவும்
நன்றாகவே நடக்கும்.
உன்னுடையதை எதை இழந்தாய்
எதற்காக நீ அழுகிறாய்
எதை நீ கொண்டு வந்தாய் ?
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருக்கிறாய்,
அது வீணாகுவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொவருடையதாகிறது.
மற்றொரு நாள் அது
வேறொருவருடைதாகும்.
இந்த மாற்றம் உலக நியதியாகும்.
- இதுவே எனது படைப்பின் சாராம்சமாகும்-
-பகவத் கீதை -
Sri Maruthi Printers, 555, Navlar Road, Jaffna.
Tel : 0777 917680